Food and Agriculture Organization of the United Nations



# சிறு தொழில் மீனவர்களுக்கு கடலில் பாதுகாப்பு

## அவசரகால தயார்நிலை

## பொருளடக்கம்

- கேப்டனின் கடமைகள்
- அத்தியாவசிய பாதுகாப்பு
- அவசரநிலைகளுக்கான பயிற்சி
- அவசரநிலைகளுக்கான திட்டமிடல்
- அவசரகால பதில்
- அத்தியாவசிய உதவிக் குறிப்புகள்



# கேப்டனின் கடமைகள்

## கேப்டனின் பொறுப்புகள்



கேப்டனின் பொறுப்புகளாவன

- பணியாளர்களின் பாதுகாப்பு
- படகு பாதுகாப்பு
- படகு இயக்கியதில் இருந்து சேதம்

படகு எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சிறியதாக இருந்தாலும், ஒவ்வொரு படகிலும் ஒரு கேப்டன் இருக்கிறார், **அவர் கப்பலில் இருப்பவர்களின் பாதுகாப்பு மற்றும் நீரில் ஏற்படும் ஆபத்துகளை நிர்வகிப்பதில் அவரின் கடமையாகும்.**

ஒரு படகின் பாதுகாப்பு மற்றும் அப்படகில் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு கேப்டேனே பொருப்பாகும் மற்றும் கடற்பயணத்தின் போது கடல் விதிகளை தவிர்ப்பது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

உயிர் கவசத்தை அணிவதன் மூலமும், பயனுள்ள நீர்ப்புகாத தகவல் தொடர்பு சாதனங்களை எடுத்துச் செல்வதன் மூலமும் கப்பலில் இருப்பவர்கள் எதிர்பாராத விபத்துக்கு தயாராக இருப்பதை கேப்டன் உறுதி செய்வதன் மூலம், படகினை அபாயகரமான விபத்தில் இருந்து பாதுகாத்துகொள்ள உதவுகிறது.

## கேப்டனின் கடமைகள்

விபத்துகள் நடக்கலாம்! பயணத்திற்கு புறப்படுவதற்கு முன் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கேப்டன் எடுக்க வேண்டும்

**முழுமையான சரிபார்ப்புப் பட்டியல்கள்**

- கப்பல் பாதுகாப்பாக மற்றும் அனைத்து உபகரணங்களும் வேலை செய்யும் நிலையில் உள்ளன என்பதை உறுதிசெய்ய வழங்கப்பட்ட சரிபார்ப்புப் பட்டியல்களை பூர்த்தி செய்யவும்
- குழுவினர் சரியான துணை கருவிகளை வைத்திருப்பதையும், பயண விவரங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் இருப்பிடங்கள் குறித்தும் தெரிவிக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

**வானிலை முன்னறிவிப்புகளைச் சரிபார்க்கவும்**

- பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன், உள்ளூர் வானிலை நிலவரங்களை பெற வேண்டும். இவ்வாறு பெறுவது நமக்கு தேவைப்பட்டால் நமது பயணத்தை மாற்றியமைக்க உதவும்.

**நீங்கள் மீன்பிடிக்கச் செல்லும் பகுதியை அறிந்து கொள்ளுங்கள்**

- கடற்பயணம் தொடர்பாக ஏதேனும் உள்ளூர் ஆபத்துகள் அல்லது கட்டுப்பாடுகள் உள்ளதா என தெரிந்து கொள்ளவும். இந்தத் தகவலை விளக்கப்படங்கள் மற்றும்/ அல்லது உள்ளூர் மக்களிடம் கலந்தாலோசிப்பதன் மூலம் பெறலாம்
- **உங்கள் கப்பலின் வெளிப்புறத்தை (கூடு மற்றும் எஞ்சின்) ஆய்வு செய்யுங்கள்.**
  படகு கூடில் எதாவது விரிசல் (அ) சேதம் இருக்கிறதா? எஞ்சின் நன்றாக இயங்குகிறதா? உந்து சுழலி குழாய் நன்றாக உள்ளதா? பல பயன்பாடு கொண்ட பொருட்களான துடுப்புகள் பாய்மரம், வெற்று நெகிழிகள், அலுமினிய பாத்திரங்கள், வெற்று இரும்பு கூண்டுகள், இவையனைத்தும் கப்பலின் கூடுதல் பாதுகாப்பை உறுதிபடுத்தும்.

## கப்பல் தயாரிப்பு மற்றும் சரிபார்ப்பு பட்டியல்

**உங்கள் கப்பல்**

அதிக எடை ஏற்ற வேண்டாம் உங்கள் படகு நிலைப்புத்தன்மை குறையும், மற்றும் எரிபொருள் செலவினம் மிக தீவிரமாக அதிகமாகும்.

- முன்புறத்தில் அதிக எடையை ஏற்றக் கூடாது மற்றும் இவ்வாறு ஏற்றும்போது அனியம் அலைகளின் போது கடலுக்கள் சென்று சொருகிக் கொள்ள வாய்ப்பு உண்டு
- படகின் முன்முனை அதிக எடை எற்றுவது படகு கவிழ வழிவகுக்கும். மேலும் பின்புறம் எடை அதிகரிக்கும் போது முன்புறம் தூக்கியவாறு இருக்கும், இவை படகு காற்றடிக்கும் போது கடலில் கவிழ்ந்து விடலாம்.
- கப்பலில் உள்ள அனைத்து பொருட்களும் பாதுகாப்பாக இருப்பதையும், மற்றும் படகின் நிலைப்புத் தன்மை சரியாக இருப்பதையும் உறுதிப்படுத்தவும்

*உங்கள் கப்பலுக்கு ஏற்ற பட்டியலைப் பயன்படுத்தவும்*

## தனிப்பட்ட தயார்நிலை

**ஒரு குழு உறுப்பினராக தனிப்பட்ட முறையில் நிங்கள்தான் தயராகி கொள்ள வேண்டும்:**

- நீச்சலடிப்பது தெரிந்திருக்க வேண்டும்.
- கால சூழ்நிலைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்து கொள்ள பாதுகாப்பு ஆடைகளை அணியுங்கள் அல்லது எடுத்துக் கொள்ளுங்கள்.
    - தொப்பி
    - சட்டை
    - நீண்ட கால்சட்டை
    - மழைக் கவசம்
    - சூரிய ஒளி பாதுகாப்பு கண்ணாடி
    - கையுறைகள்
    - சீருடை
    - பாதணி – அனைத்தும் நல்ல பிடிப்புடன் இருக்கிறதா என பார்க்க வேண்டும்





## அத்தியாவசியமான பாதுகாப்பு

## உயிர் கவசங்கள் மற்றும் மிதவை உதவிகள்

பரிந்துரைக்கப்பட்ட விதிகள்:

- மிதவை உயிர் கவசங்கள் சரியான அளவில் பொருத்தமாக இருக்க வேண்டும்
- ஒவ்வொருவருக்கும் ஒரு மிதவை உயிர் கவசம் இருக்க வேண்டும்
- 16 அடிக்கு தூக்கிய எறியக்கூடிய வகையில் ஒரு மிதவை உயிர் வளையம் அல்லது மிதவை கயிறுடன் இணைப்பட்ட ஒரு மிதவை பஞ்சு மெத்தை எப்போதும் படகுடன் பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்.
- அனைத்து உயிர் கவசங்கள், மெத்தைகள் மற்றும் வளையங்கள் எப்போதும் சேவை செய்யக்கூடிய நிலையில் மற்றும் உடனடியாக அணுகக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்

### உயிர் கவசம் பரிசீலனைகள்

- ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியே மிதவை உயிர் கவசம் இருக்க வேண்டும்
- மிதவை உயிர் கவசங்கள் பொருத்தமாக இருக்க வேண்டும், சரிசெய்யும் வகையில் உடனடியாகக் இருக்க வேண்டும்
- கிழிந்திருந்தாலோ அல்லது சேதமடைந்தால் அவை மாற்றப்பட வேண்டும்



## மிதவை உயிர் கவசங்கள் மற்றும் மிதவை உதவிகள்

மிதவை உயிர் கவசம் பரிந்துரைக்கப்பட்ட படிநிலைகள் படி வடிவமைக்க வேண்டும்.

1. 2 வினாடிகள் தீயில் பட்டவுடன் எரிய ஆரம்பிக்க கூடாது மேலும் எரிந்து உருகுவது கூடாது
2. குறைந்பட்சம் 75% சதவீத மக்களாவது எந்தவொரு உதவி, வழிகாட்டுதல் அல்லது முதன்மை காட்சியமைப்பு இல்லாமல் ஒரு நிமிடத்திற்குள் மிதவை உயிர்கவசத்தை சரியாக அணிந்து கொள்ள வேண்டும்.
3. இதனை ஒரு முறையில் மட்டுமே அணியலாம் உட்பக்கமாக அல்லது வெளிப்புறமாக இதனை மாற்றி அணிவதால் பாதிப்பு ஏதுமில்லை.
4. மிதவை உயிர் கவசம் அணிந்தவருக்கு பாதுகாப்பு முறையானது, விரைவாக மூடுவதற்கான வழிமுறைகளை கொண்டது. முடிச்சுகள் விரைவாக போடுவது அடங்காது.



## அவசர மிதப்பு பரிசீலனைகள்

கடலுக்குச் செல்வதற்கு முன், கப்பல் எதிர்பாராதவிதமாக நீருக்குள் மூழ்கும் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு திட்டமிடுவது அவசியம்:

- நீர் திறந்த அல்லது படகின் குழி பகுதிகளுக்குள் நுழைந்து, மிதவை திறனை இழக்கச் செய்வதனால் படகு கடலில் முழ்கும் அபாயம் ஏற்படலாம்.




## அவசர மிதப்பு பரிசீலனைகள்

கப்பல் மூழ்கும் போது ஒரு சிறிய கப்பல் '' உயிர்காக்கும் படகு '' ஆக மாற வேண்டும்:

கடலுக்குச் செல்வதற்கு முன் கப்பலில் மிதக்கும் பொருள் கட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது வைக்கப்பட வேண்டும், இது முழ்கும் தருவாயில் கப்பலை மிதக்க மற்றும் சமநிலையில் நீரில் மிதக்க செய்ய உதவும்.

கடலுக்கு செல்வதற்கு முன், மிதவை பஞ்சு பாலிஸ்ட்ரின் அல்லது காலி நெகிழி குப்பிகள் டிரம்கள் மிதப்பதற்காக பயன்படுத்தப்படலாம்.



## தீயை அணைக்கும் கருவிகள்

அனைத்து சிறிய படகுகளிலும் தீயை அணைக்கும் கருவி அல்லது குறைந்தபட்சம் ஒரு தீ வாளி இருக்க வேண்டும்.

தீயை அணைக்கும் கருவிகள் கட்டாயம் இவ்வாறு இருக்க வேண்டும்:

- தகுதிவாய்ந்த அதிகாரத்தால் அங்கீகரிக்கப்பட்ட வகை
- இயந்திரத்திற்கு அருகில் அமைக்கவேண்டும்
- அனைத்து பணியாளர்களாலும் இயக்கப்படும் திறன் கொண்டதாக வேண்டும்





## தீயை அணைக்கும் கருவிகள்

தீயை அணைக்கும் கருவிகள் குறிப்பிட்ட வகைகளைச் சமாளிக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை **6** வகைகளாக வகைபடுத்தப்பட்டுள்ளன.

வெவ்வேறு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்ட தீ

- வகுப்பு A – மரம், காகிதம், அல்லது துணி போன்ற திடப் பொருட்களை உள்ளடக்கிய தீ
- வகுப்பு B – எரியக்கூடிய திரவங்களான பெட்ரோல், டீசல் அல்லது எண்ணெய்கள் உள்ளடக்கிய தீ
- வகுப்பு C – வாயுக்கள் சம்பந்தப்பட்ட தீ
- வகுப்பு D – உலோகங்கள் சம்பந்தப்பட்ட தீ
- வகுப்பு E – மின் சாதனம் சம்பந்தப்பட்ட தீ
- வகுப்பு F – சமையல் எண்ணெய்களை உள்ளடக்கிய தீ

பொருத்தமான தீயை அணைக்கும் கருவியை கப்பலில் எடுத்துச் செல்ல வேண்டும். A அல்லது B வகுப்பு தீயணைப்பான்கள் அல்லது தூள் அணைப்பான்கள் போன்ற பல்நோக்கு தீயணைப்பான்கள் குறிப்பாக பயனுள்ளதாக இருக்கும்.



## அவசரகால சமிக்ஞைகள்

**சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட கடல்சார் ஆபத்துகால சமிக்ஞைகளில் பல வகைகள் உள்ளன**

இதில் பார்க்கக்கூடிய, கேட்கக்கூடிய மற்றும் ரேடியோ சமிக்கைகள் அடங்கும்

**காட்சி அவசர சமிக்ஞைகள்**

- ராக்கெட்டுகள், புகை சமிக்ஞைகள், மெதுவாக மீண்டும் மீண்டும் உங்கள் கைகளை அசைத்தல், கண்ணாடி சமிக்ஞைகள், கொடிகள் அல்லது புகை

**கேட்கக்கூடிய ஆபத்து சமிக்ஞைகள்**

- காற்று விசில், மணிகள் மற்றும் விசில்கள்

**ரேடியோ ஆபத்து சமிக்ஞைகள்**

- மேடே அழைப்புகள் மற்றும் EPIRB/ PLB சமிக்ஞைகள்



## அவசர தேவை பொருட்கள்

அவசரகால 'கிராப்' நீர்ப்புகா பைகள் மற்றும் மிதக்கும் மற்றும் எளிதில் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும்

உயிர்வாழ்வதற்கு உதவுவதற்கு அவசரகாலத்தில் பயன்படுத்தக்கூடிய பொருட்கள், இதில் அடங்கும்:

- ஊதப்பட்ட உயிர் கவசங்கள் அல்லது PFD
- புகை சமிக்ஞைகள்
- தீப்பொறிகள்
- விசில்
- EPIRB
- கையடக்க VHF ரேடியோ
- நீர்ப்புகா விளக்கு
- முதலுதவி பெட்டி
- கைபேசி
- கையடக்க ஜி.பி.எஸ்.

## அவசர தேவை பொருட்கள்

அவசரகால பை இன்றியமையாததாகக் கருதப்பட வேண்டிய பல பொருட்கள் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்




**உணவு பொருட்கள்**

ஒவ்வொரு நபருக்கும் > 2400 கிலோகலோரி கொண்ட இந்த உணவு பொருட்கள் சந்தை வாழ்நாள் முழுவதும் சுவையான மற்றும் உண்ணக்கூடியதாக திறக்க மற்றும் பிரிக்க எளிதாக இருக்க வேண்டும்.




**தண்ணீர் பொருட்கள்**

ஒவ்வொரு நபருக்கும் 1.5 லிட்டர் தண்ணீர் அல்லது உப்பு நீக்கும் சாதனம் அல்லது இரண்டு நாட்களில் ஒரே அளவு தண்ணீரை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும்.



**மீன்பிடி கருவிகள்**

கூடுதல் உணவு பெற மீன்பிடி கருவிகள் வேண்டும்



மிதவை மீட்பு சாதனம் குறைந்தபட்சம் 30 மீட்டர் மிதவைக் கயறு இணைக்கப்பட்ட மிதவை மீட்புக் வளையம்

## தொடர்பு நடைமுறைகள்

**நண்பர் அமைப்பைப் பயன்படுத்தவும்:**

ஒரு அருகிலுள்ள கப்பலுக்கு தகவல்தொடர்பு திட்டத்தை அமைக்கவும்

நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவர் எங்கே இருக்கிறார்கள் என்பதை உறுதிசெய்து, அவ்வப்போது சரிபார்க்கவும்

**திட்டங்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால் தெரிவிக்கவும்:**

பயணத் திட்டம் மாறினால் (இலக்கு அல்லது எதிர்பார்க்கப்படும் வருவாய்), பொருத்தமான தரப்பினரைத் தொடர்பு கொள்ளவும்

பயணமானது ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதை விட அதிக நேரம் எடுக்கும் எனில், குழுவின் குடும்பத்தினருக்கு மாற்றம் குறித்து அறிந்திருப்பதை உறுதிப்படுத்தவும்.





## அவசரநிலைகளுக்கான பயிற்சி

## அவசரநிலைகளுக்கான பயிற்சி

அவசரகால சூழ்நிலைகளுக்கான வழக்கமான பயிற்சி அனைத்து குழு உறுப்பினர்களும் அவசரநிலைக்கு தயாராக இருப்பதை உறுதிப்படுத்த உதவும்

சேர்க்க வேண்டிய நடைமுறைகள்:

- மோதல்கள், தீ, தரையிறக்கம், கவிழ்தல் போன்ற அவசரநிலைகளின் வகைகள் ஆகும்
- மிதவை உயிர்காக்கும் வளையத்தை படகில் கொண்டு செல்ல மற்றும்இதை எவ்வாறு பயன்படுத்துவது பற்றிய தகவல்.
- முதலுதவி பயிற்சி
- அடிப்படை தீயை அணைக்கும் பயிற்சி
- மனிதன் கப்பலிருந்து கீழே தவறி விழுதல்
- கைவிடப்பட்ட கப்பலிருந்து தப்பித்தல்
- அவசர மற்றும் ஆபத்துகால அழைப்புகளை எப்படி செய்வது
- கடலில் உயிர் பிழைத்தல்.





## அவசரநிலைக்கான திட்டமிடல்

## சாத்தியமான அவசரநிலைகள்

இந்த பிரிவில் உள்ள அவசரகால சூழ்நிலைகளின் பட்டியல் கீழே உள்ளது:

- எரிபொருள் தீர்ந்துவிட்டது
- நிலம் கண்ணில் படாத தூரத்தில் இருத்தல்
- அதிக சுமை
- கப்பல் கசிந்து
- மூழ்குவது
- கப்பலின் உறுதியற்ற தன்மை
- எஞ்சினின் செயலிழப்பு
- கப்பலில் திடீர் தீ
- திடீர் வானிலை மாற்றம்
- ஒரு பாறை மீது தரையிறக்கம்
- மற்றொரு கப்பலுடன் மோதல்
- கடலில் திசைமாற்றி இழப்பு
- கடலில் உந்துசக்தி இழப்பு.
- கவிழ்வது
- மனிதன் கப்பலிருந்து தவறி கீழே விழுதல்
- கப்பலிருந்து கீழே விழுந்தவரை மீட்பது

**அவசியம்**


- மனிதனின் பிழைகள் ஆபத்து நிலைகளை உருவாக்கலாம்
- ஆபத்துநிலைகலிருந்து மீள்வதை பற்றி பயிற்சி பெற்றிருக்க வேண்டும்
- எதாவது பிரச்சினை நேர்ந்தால் உடனடியாக கேப்படனுக்கு தெரிவிக்கவும்



## எரிபொருள் தீர்ந்துவிட்டது

- கடலுக்கு போதுமான எரிபொருளை எடுத்துச் செல்லுங்கள்
- உத்தேசித்த தூரத்திற்கு தேவையானதை விட அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள்
- பயணத்தின் உதவிக்கு வானொலியைப் பயன்படுத்தவும்
- பாய்மரங்கள் மற்றும் துடுப்புகள் போன்ற மாற்று உந்துவிசை மூலங்களைப் பயன்படுத்தவும்








## நிலம் தெரியாத தூரத்தில் பயணித்தல்

- கடற்பயண திறன்களைப் பயன்படுத்தவும்
- நிலம் கடைசியாகக் காணப்பட்ட திசையை நோக்கிச் செல்லுங்கள்
- இல்லையெனில் தெளிவான வானத்தில் குமுலஸ் மேகங்கள் அடிக்கடி நிலத்தின் மீது கூடும் அதைபார்த்து செல்லுங்கள்.





## கப்பல் மூழ்கியது

- கப்பலில் அதிக எடை ஏற்ற வேண்டாம்
- கூடுதல் சரக்கு அல்லது மீன்களை நிராகரிக்கவும்
- தண்ணீரை வெளியேற்றவும்







## கப்பல் கசிவு

- துறைமுகத்தில் படகை பழுதுபார்த்து எடுத்து செல்லவும்
- கடலில் தற்காலிக பழுது பார்ப்பது
- தொடர்ச்சியான நீர் வெளியேற்றம் அல்லது மோட்டர் மூலம் வெளியேற்றுவது.







## கசிவை அடைக்கவும்

- **சிக்கல் இடத்தைக் கண்டறியவும்:** கசிவைக் கண்டறிவதே உங்கள் முன்னுரிமை
- **உங்கள் படகு கூடு சரிபடுத்துங்கள்:** கசிவு கசிவானது படகு கூட்டின் இணைப்புகளின் வழியாக உள்ளே வந்தால், ஒரு முக்கோன மிருதுவான மரத்துண்டை எடுத்து அடைக்கவும்
- **நெகிழி மூலம் பாதுகாக்கவும்:** தாக்கம் காரணமாக கூடு உடைந்திருந்தால், படகு கூட்டின் வெளிப்புறத்தில் கசிவின் குறுக்கே ஒரு பெரிய நெகிழி தாளை வைத்து கயிறுகளால் பிளாஸ்டிக்கைப் உறுதிபடுத்தவும்.



## மூழ்குதல்

உங்கள் படகு தண்ணீரை நிரம்ப ஆரம்பித்தால், முதலில் செய்ய வேண்டியது, கப்பலில் உள்ள அனைவரும் உயிர் கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

- ஒரு ஆபத்துகால அழைப்பை உருவாக்கி, ஆழம் குறைந்த பகுதியை நோக்கிச் செல்லவும்
- தண்ணீர் கசிவுக்கான காரணத்தைக் கண்டறிந்து, துளைக்குள் எதையாவது தள்ளுவதன் மூலம் நீரின் ஓட்டத்தைக் குறைக்க முயற்சிக்கவும், மேலும் உங்களால் முடிந்தவரை தண்ணீரை வெளியேற்றவும்
- படகு நீரில் மூழ்கினால் அல்லது திரும்பினால், படகுடன் இருந்தால் – நீங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கான அதிக வாய்ப்பு உள்ளது நீங்கள் மிதவை உயிர்க்கவசம் அணிந்திருக்காவிட்டால் கரைக்கு நீந்தி வர முயற்சிக்காதீர்.
- தலைகீழாக மூழ்கிய படகு போன்ற மிதக்கும் பொருட்களுடன் நீங்கள் தண்ணீரில் இருந்தால், முடிந்தவரை உங்கள் உடற்பகுதியை தண்ணீரிலிருந்து வெளியே உயர்த்தவும்.



## கப்பலின் உறுதியற்ற தன்மை

- படகின் எடையை சரியாக ஏற்றவும்
- படகில் எடை குறைவாக வைத்திருங்கள்
- எடையை மறுசீரமைக்கவும்
- கப்பலடியில் நீர்வடிகால் அளிக்கவும்








## எஞ்சின் செயலிழப்பு

- தவறாமல் எஞ்சினை பழுது பார்க்கவும்
- உதிரிபாகங்கள் மற்றும் கருவிகள் இருக்க வேண்டும்
- பழுதுபார்க்க முயற்சிக்கவும்
- உதவிக்கு வானொலி வைத்துக் கொள்ளவும்
- மாற்று உந்துவிசையைப் பயன்படுத்தவும்.








## கப்பலில் தீ

**தீ முக்கோணம்:** நெருப்பு எரிவதற்கு **3** ஆதாரங்கள் தேவை: ஆக்ஸிஜன், வெப்பம் மற்றும் எரிபொருள்




## கப்பலில் தீ

**நெருப்பைக் கண்டறியும் போது:**

- வெப்ப மூலத்தை அகற்றவும்
- ஆக்ஸிஜன் மூலத்தை அகற்று
- எரிபொருள் மூலத்தை அகற்று.

## பெரிய தீ

- உதவிக்கு அழைக்கவும் மற்றும் வெளியேற்றும் நடைமுறைகளை ஒழுங்கமைக்கவும்
- பெரிய தீயை மட்டும் எதிர்த்துப் தனியாக போராடுவதைத் தவிர்க்கவும்

## திடீர் வானிலை மாற்றம்

- மீன்பிடிப்பதை நிறுத்துங்கள்
- துறைமுகத்திற்குச் செல்லுங்கள்
- கடலுக்குச் செல்வதற்கு முன் வானிலை முன்னறிவிப்பைச் சரிபார்க்கவும்:
    - காற்று அலையை எதிர்க்கும் போது, மிகவும் கரடுமுரடான கடலை எதிர்பார்க்கலாம்
    - காற்று அலையுடன் இருக்கும்போது, அமைதியான கடலை எதிர்பார்க்கலாம்



## பாறை மீது தரையிறக்கம்

- நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள்
- பயண பகுதிகளை தெரிந்துக்கொள்ளுங்கள்
- பாதுகாப்பாக இருந்தால் வெளியேற முயற்சிக்கவும்
- உதவிக்கு வானொலியை அழையுங்கள்







## கப்பல் மோதல்

- நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள்
- சேதத்தை பழுது பார்க்கவும்
- ஒருவருக்கொருவர் உதவுங்கள்







## கடலில் திசைமாற்றி சக்கர இழப்பு

- திசைமாற்றி சக்கர கியரை தவறாமல் சரிபார்க்கவும்
- சுக்கான் அமைப்பை சரி செய்யவும்








## கடலில் உந்துசக்தி இழப்பு

- உந்துசுழலியை தவறாமல் சரிபார்க்கவும்
- உதவிக்கு வானொலி அழையுங்கள்
- மாற்று உந்துவிசையைப் பயன்படுத்தவும்.







## கவிழ்தல்

எப்போதும் தயாராக இருங்கள்:

- கப்பலில் எல்லா நேரங்களிலும் மிதவை உயிர்கவசங்களை அணியுங்கள்
- உங்கள் படகு மூழ்குமா, முன்பகுதி மட்டும் நீருக்கு மேலே உள்ளவாறு மிதக்குமா என்பதை அறிந்து கொள்ளுங்கள்
- கப்பல் கவிழ்ந்து இருக்கும்போது தாங்கள் யாரிடமாவது நான் ஆபத்தில் இருக்கிறேன் என்று அருகில் உள்ள படகிற்கு சொல்ல வேண்டும்.
- கையில் சிவப்பு வண்ண கையடக்க தீப்பொறிகளை எடுத்து காட்டுவது மிக சிறந்தது. இவற்றை இரு நேரங்களிலும் பயன்படுத்தலாம்.
- சக்திவாய்ந்த நீர்ப்புகா விளக்கை எடுத்துச் செல்லுங்கள்



## கவிழ்தல்

கவிழ்ந்த சிறிய படகின் வலதுபுறம்:

- படகு கூட்டின் மீது ஊர்ந்து செல்லவும்
- மையப் பகுதியை (ஏறா) பிடித்து, பின்னால் சாய்ந்து, படகைக் கவிழ்க்க நெம்புகோலாக மையப் பலகைக்கு எதிராக உங்கள் எடையைப் பயன்படுத்தவும்
- நிமிர்ந்து இருக்கும் போது, கப்பலில் ஊர்ந்து செல்லவும்
- தண்ணீரை வெளியே எடுக்கவும்
- உங்கள் கவிழ்ந்த படகு மையப் பலகை இல்லாத மோட்டார் படகாக இருந்தால், ஒரு கயிற்றின் ஒரு முனையை படகின் நடுவில் பாதுகாப்பான ஏதாவது ஒன்றில் கட்டி, ஒரு வளைவு போன்ற, கயிற்றின் இன்னோரு முனையை படகு கூட்டில் மேல் தூக்கி எறியுங்கள்.
- கயிற்றின் முனையைப் பிடிக்க கூட்டின் மீது ஊர்ந்து, கயிறு கட்டப்பட்டிருக்கும் பக்கத்தை எதிர்கொள்ளவும், பின்னர் தண்ணீரை நோக்கி பின்வாங்கி, பின்னால் சாய்ந்து, கயிற்றின் மீது உங்கள் எடையைப் பயன்படுத்தி படகை இழுத்து கவிழ்க்கவும்.





## படகில் இருந்து தவறி விழுதல்

ஒருவர் கப்பலிருந்து தவறி கீழே விழும்போது நினைவில் கொள்ள வேண்டிய விஷயங்கள்:

- மிகத் தெளிவாக ‘‘மனிதன் கப்பலில்’’ என்று கத்தவும்,
- அந்த நபர் சென்ற பக்கத்தை நோக்கி திரும்பவும்
- குறிப்பாக மிதக்கும் அல்லது தண்ணீரில் இருக்கும் நபர் மிதக்க உதவும் எதையாவது எறிந்து பிடித்துக் கொள்ள செய்யுங்கள்
- தண்ணீரில் இருக்கும் நபரை கவனமாகப் பாருங்கள்
- உடனடியாக படகை நிறுத்தி தண்ணீரில் இருக்கும் நபருக்கும் மற்றும் படகுக்கும் இடையேயுள்ள தூரத்தை குறைந்தளவில் இருக்குமாறு வைத்துக் கொள்ளவும்.
- இரவில் ஸ்பாட்லைட்டைப் பயன்படுத்து
- மீட்பவருக்கு ஒரு கயிறை இணைக்கவும்

நீங்கள் திரும்பும்போது, படகின் பின்புறம் (பின்புறம்) தடுமாறிகிறது எனவே நீங்கள் போக்கை மாற்றும்போது உந்துசுழலி அதிர்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள், காயத்தைத் தவிர்க்க, படகின் பின்புறத்தை (பின்புறம்) தண்ணீரில் உள்ள நபரிடமிருந்து விலக்கவும்.

இது ஒரு ஆபத்தான சூழ்நிலை, எனவே தண்ணீரில் உள்ள நபரை உடனடியாக மீட்க முடியாவிட்டால், உங்கள் VHF வானொலி பயன்படுத்தி மேடேயை அழைக்க தயங்க வேண்டாம்.

## படகில் இருந்து தவறி விழுந்தவரை மீட்டல்

- தண்ணீரில் இருக்கும் நபரை நீங்கள் தெளிவாகக் குறிப்பிடுவதை உறுதிசெய்து, கீழ் காற்றிலிருந்து (காற்றுக்குள்) நபரை அணுகவும்.
- நீங்கள் நபருக்கு அருகில் இருக்கும்போது எஞ்சினை நிறுத்துங்கள், அதனால் நீங்கள் ஒரு கயிறை அவரை நோக்கி எறியலாம் அல்லது அவர்கள் உங்களிடம் நீந்தி வர உதவும்
- சிறிய திறந்த படகு மற்றும் குறைந்த எடைவசதி கொண்ட படகுகளில் எடை ஏற்றும்போது, முன் அல்லது பின்பக்கமாக ஏற்றுவது படகு கவிழ்வதை தவிர்க்கும்.
- உங்கள் படகில் ஏற ஏணி ஏதும் இல்லை என்றால், தண்ணீரில் இருக்கும் நபர் தனது கால்களை உள்ளே வைக்க ஒரு கயிற்றில் பக்கவாட்டில் ஒரு வளையத்தை உருவாக்கி ஏற உதவவும்.





## அத்தியாவசிய குறிப்புகள்

## கப்பலில் கைவிட்டுவிட்டு வெளியேறுதல்

- அனைத்து கப்பல்களும் கடலுக்குச் செல்வதற்கு முன் கைவிடும் திட்டத்தை நிறுவி நடைமுறைப்படுத்த வேண்டும், இதனால் கப்பலில் உள்ள அனைத்து பணியாளர்களும் நிகழ்வில் என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாக அறிந்து கொள்ள உதவும்.

அவசரநிலைக்கு பின்வரும் வழிமுறைகளை முடிந்தவரை பின்பற்ற வேண்டும்:

- மேடே அழைப்பை அவசரகால சேனல் 16 இல் அழைத்து நீங்கள் பதில் கிடைக்கும் வரை அல்லது வரும் வரை அழைப்பை மீண்டும் மீண்டும் செய்யவும் அல்லது கட்டாயமாக கப்பலை விட்டு வெளியேற வேண்டும்.
- உங்களிடம் நேரம் இருந்தால் பொருத்தமான ஆடைகளை அணியுங்கள்
- உங்கள் மிதவை உயிர் கவசம் அணியுங்கள் (ஏற்கனவே அணியவில்லை என்றால்), இது உங்களை மிதக்க வைக்கிறது, ஆனால் உயிர் கவசம் இல்லாமல் உங்கள் உடல் 35 சதவீதம் அதிக வெப்ப நீரை இழக்கும்.



## கப்பலை கைவிட்டு விட்டு வெளியேறுதல்

- உங்கள் அவசர பையை எடுத்துக் கொள்ளுங்கள் – சரியாகத் தயாரித்தால், உயிர்வாழ உதவும் அத்தியாவசிய பொருட்கள் நிறைந்திருக்கும்.
- உங்களுக்கு நேரம் இருந்தால் – கூடுதல் உபகரணங்களை எடுத்துக் கொள்ளுங்கள் கடற்பயண கருவிகள், உணவு மற்றும் தண்ணீர் போன்றவை பயனுள்ளவை
- உங்களிடம் உயிர்காப்பு படகு இருந்தால் – அதை இயக்கவும்
- இல்லையென்றால் – கப்பல் மூழ்கும் முன் படகை கைவிட்டு விட்டு, உடலின் வெப்பத்தைத் தக்கவைக்க மற்ற குழுவினருடன் தண்ணீரில் வளைந்து கொள்ளுங்கள், அல்லது ஏதேனும் மிதக்கும் உபகரணங்களைப் பிடித்து உங்கள் உடலைப் அனைத்து பிடிக்கவும்.
- நீரிலிருந்து முடிந்தவரை உங்கள் சமிக்கைகளைப் பயன்படுத்தவும் – உங்கள் EPIRB/ PLB ஐச் செயல்படுத்தவும் அது இல்லை என்றால் மற்றொரு ஆபத்துகால சம்க்ஞை மேடேவை அழைக்க உங்கள் VHF ஐப் பயன்படுத்தவும் அல்லது யாரையாவது தொடர்பு கொள்ள செல்போன் பயன்படுத்தவும்.
- எரிப்புகள், கண்ணாடிகள் மற்றும் விசில்கள் அனைத்தும் பயனுள்ளதாக இருக்கும்



## கடலில் குடிநீரைக் கண்டறிதல்

மழைநீரைப் பிடிக்க உங்கள் படகுக்கு வெளியே நெகிழி தார்ப்பாய் மூலம் கூடு அமைத்து பிடித்து அதை கொள்கலன்களில் வடிகட்டவும், மழையின் முதல் துளிகள் தார்ப்பாயில் இருந்து உப்பைக் கழுவ அனுமதியுங்கள் பிறகு வருவதை பிடித்து பயன்படுத்துங்கள்.

உங்களிடம் தார்ப்பாய் இல்லையென்றால், ஈரப்பதத்தை உறிஞ்சுவதற்கு துணியைப் பயன்படுத்தவும், பின்னர் அதை கொள்கலனில் பிழிந்து நிரப்பவும்

***உப்புநீரை ஒருபோதும் குடிக்காதீர்கள் – அது உங்களை நோய்வாய்ப்படுத்தும் மற்றும் நீரிழப்பு மற்றும் மரணத்தை துரிதப்படுத்தும்***

உங்களிடம் பாய்மரங்கள் இருந்தால், தண்ணீரைப் பிடிக்க அதிலிருந்து ஒரு கிண்ணத்தை உருவாக்கவும்.

தார்கள், சட்டைகள், நெகிழி தாள்கள் மற்றும் படகில் கூட தண்ணீர் சேகரிக்க முடியும் மற்றும் எந்த தகர குவளை, குப்பி அல்லது கொள்கலனும் அதை சேமிக்க முடியும்



நீங்கள் சேகரிக்கும் முதல் தண்ணீரில் அதிக உப்பு இருக்கும், எனவே அதை தனித்தனியாக சேமித்து, காயங்களை சுத்தம் செய்ய அல்லது சாப்பிடுவதற்கு முன் உணவை கழுவ பயன்படுத்திக் கொள்ளவும்.


## திறந்த வெளியில் மீன் பிடிப்பது

**திறந்த வெளியில் மீன் பிடிப்பது**

நீங்கள் உயிர் காக்கும் படகில் இருந்தால், சிறிய மீன்கள் அடிக்கடி தெப்பத்திற்கு அடியில் சேகரிக்கின்றன, ஆர்வத்தினால் அல்லது அங்கு அடைக்கலமாக உணர்வதினால் வந்து சேருகின்றன, அந்த மீன்கள் பிடித்து உங்கள் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்யலாம்

ஒரு உருளையில் தூண்டில் மற்றும் ஏதேனும் கவரும் வகையில் தூண்டில் முள், பொய் இரைகளை கீழே எறிந்து மீன்களை பிடிக்கவும். மேலும் இவை உயிர்காக்கும் படகில் மாட்டி கொள்ளாதவாறு வைக்கவும்

மீனைப் பிடித்த பிறகு, குடலைத் தூண்டிலில் மாட்டி மீனுக்கு இறையாக பயன்படுத்தி மேலும் பிடிக்கவும்



## முடிவு

**நினைவில் கொள்ளுங்கள்:**

- பாதுகாப்பு என்பது அனைவரின் முன்னுரிமை
- அபாயங்களை அடையாளம் காண கற்றுக்கொள்ளுங்கள், மேலும் ஆபத்தை நீங்கள் கண்டால், விரைவாக செயல்படுங்கள்
- அவசரகால சூழ்நிலைகளுக்கு தயார்படுத்துவது ஆபத்தை குறைத்து உயிர்களை காப்பாற்றவும்

**குழு கேள்வி மற்றும் பதில்**